[1991 சனவரி 25

2. தகவல் கோரல்.

(அ) திருப்பூர், பல்லடம் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ மழை தவறியதன் காரணமாக, கோவை மாவட்டம், திருப்பூர், பல்லடம் ஆகிய பகுதிகளில் கடுமையாக ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலையின் காரணமாக அங்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, அங்கே நிலத்தடி நீர் முழுவதும் கீழே சென்ற காரணத்தால், அரசினுடைய ஆழ் துளைக் கிணறுகள் அல்லது பொதுக் கிணறுகள் அனைத்திலுமே நீர் மட்டம் கீழே சென்று, இன்றைக்கு குடிநீருக்காக அப்பகுதியிலே வாழ்கின்ற மக்கள் மிகப் பெரிய கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சருடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருவதோடு, இன்றைக்கு அந்தப் பகுதியிலே, பரம்பிக் குளம்-ஆளியாறு நீர்ப் பாசனத் திட்டத்தின் மூலமாக, பல்லடம், திருப்பூர் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய குளம், குட்டைகளில், முழுவதுமாக அல்ல, பல்லடத்தின் வடக்குப் பகுதிக்கும், திருப்பூரின் தெற்குப் பகுதிக்கும் அந்தத் தண்ணீரை விடுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அங்கே நீர்ப் பாசனத்திற்காக அல்ல—குடிநீருக்காக—நீர்ப் பிடிப்பு ஏற்படுத்துவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய குளம் குட்டைகளுக்குத் தண்ணீர் விட்டு, அந்தப் பகுதி மக்களுடைய குடிநீர்த் தாகத்தைத் தீர்ப்பதற்கு நம்முடைய அரசின் மூலமாக மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள், அதற்குரிய ஆணையிட்டு, அந்தப் பகுதி மக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, அந்தத் தாகத்தைத் தீர்க்கும் வகையிலே நல்ல பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அவருடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அணையின் தண்ணீர் இருப்புகளை ஒட்டி, அதிகாரிகளோடு கலந்து பேசி, சாத்தியக் கூறு இருக்கிறது என்றால் அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும். (குறுக்கீடு).

10-05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இசைவு கேட்க வேண்டும். கையைத் தூக்கக் கூடாது. இது Zero hour''.